# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.255/பேரூ/2023
நாள். 26.10.2023

திரு. ஆர்.மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை சிறப்புநிலை பேரூராட்சி ,
மதுரை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி என்பவரது 16.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.08.2023 அன்று பெறப்பட்டு, 255/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் 5, அய்யப்பன் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர்.மயில்சாமி, என்பவர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாவட்டம், வடக்கு வட்டம் பரவை சிறப்பு நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட AIBEA நகர், A காலனியில் ரோட்டு ஓரத்தில் கட்டப்பட்டு புதியதாக இயங்கிவரும் JAS மஹால் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டடப்பட்டுள்ளது. இம் மஹாலுக்கு நான்கு புறமும்

உரிய இடவெளி விடாமல் (Set back) சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் JAS மஹாலுக்கு வாகனம் நிறுத்துவதற்கு (Parking Space) சிறிதளவு இடம் கூட விடாமல் கட்டப்பட்டுள்ளதால் விசேஷ காலங்களில் வரும் இரண்டு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ரோட்டில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டும், பள்ளி மாணவ மாணவியர், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை மற்றும் ஆம்புலன்ஸ், குடிநீர் வாகனம், பள்ளி பேருந்துகள், கல்லூரி பேருந்துகள் இவ்வழியே செல்ல முடியாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள், மேலும் JAS மஹாலுக்கு அவசரகாலவழி (Emergency Exit) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டும், காவல்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையிடம் உரிய தடையில்லா சான்று பெறாமலும் மஹால் இயங்கி வருகிறது.

மேற்படி JAS மஹால் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33-ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால் (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறப்படவில்லை.

JAS மஹால் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடங்கள் ( உரிமம்) சட்டம் 1965, பிரிவு 2 (8)ன்படி (Section 2(8) of the Tamil Nadu Public Buildings (Licensing Act 1965)ன்படி வருவாய்த் துறையிடம் உரிமம் பெறவில்லை. இது குறித்த புகாரினை 01.08.2023 மற்றும் 10.08.2023 தேதியில் பரவை தேர்வு நிலை பேரூராட்சி செயல்அலுவலருக்கு பதிவுத் தபாலில் புகார் அனுப்பியுள்ளேன்.

எனவே மேற்படி JAS மஹால் கட்டடம், சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் மஹாலை, அதனை கண்காணிக்க தவறிய பரவை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் மேலும் JAS மஹால் கட்டடத்தை தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் Stop work Notice/Notice calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடிமுத்திரையிடும் அறிவிப்பை Lock and seal and demolition notice வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களை மிகவும் பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“பரவை வார்டு எண். 14 ஏ.ஐ.பி.இ.ஏ நகர் “ஏ ” காலனியில் சர்வே எண். 143/4A2A1ல் திரு. அ. ஜேசு அமல்ராஜ் என்பவரால் மீட்டிங் ஹால் கட்டடம் கட்ட அனுமதி கோரப்பட்டது. அதனைத் தொடர்ந்து பரவை பேரூராட்சி அலுவலக கட்டட வரைபட அனுமதி எண். 94/2021 – 22 நாள் 23.08.2021 ன்படி தரைதளத்திற்கு 797 சதுர அடியும், முதல் தளத்திற்கு 797 சதுர

அடியும் ஆக மொத்தம் 1594 சதுர அடி பரப்பில் கூட்ட அறை (Meeting Hall) கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் பரவை பேரூராட்சி வரித்தண்டலரால் மேற்படி கூட்ட அறையினை (JAS MAHAL) கள ஆய்வு செய்யப்பட்டதில் பின்வரும் விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கட்டட வரைபட அனுமதி வழங்கப்பட்டது (சதுர அடி) | கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் அளவு (சதுர அடி) | கூடுதலாக கட்டி உள்ள கட்டடத்தின் அளவு (சதுர அடி) |
|---|---|---|---|
| 1 | 797 | 2424 | 1627 |
| 2 | 797 | 2424 | 1627 |
| 3 | – | 1370 | 1370 |
| மொத்தம் | 1594 | 6218 | 4624 |

கட்டட வரைபட அனுமதி வழங்கிய அளவினை காட்டிலும் கூடுதலாக 4624 சதுர அடி அளவிற்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு சட்ட விதிமுறைகளின்படி உரிய அனுமதி பெறாமல் கட்டடம் கட்டி உள்ளது தெளிவாக தெரிய வருகிறது.

எனவே, நகர் ஊரமைப்பு சட்டவிதிமுறைகளின்படி அனுமதி பெறாமலும், பேரூராட்சி மூலம் அனுமதி வழங்கி உள்ள அளவினைவிட கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ள விதிமீறலால் சம்பந்தப்பட்ட JAS MAHAL உரிமையாளருக்கு 25.09.2023 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு, இவ்வறிவிப்பு மீறி நிகழ்ச்சிகள் ஏதும் நடத்தக்கூடாது எனவும், உரிய நகர் ஊரமைப்புத் துறை அனுமதி பெற்று உடனடியாக சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரரும் மற்றும் பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 06.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5)மனுதாரர் திரு. ஆர். மயில்சாமி 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

" மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சி AIBEA நகர் காலனியில் புதிதாக கட்டப்பட்டு இயங்கி வரும் ஜே ஏ எஸ் மகால் கட்டடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. முறைப்படி வாகன நிறுத்தும் இடம் விடாமல் கட்டப்பட்டுள்ள மண்டபத்திற்கு விசேஷ காலங்களில் வருவோர் அம்மண்டபத்திற்கு வெளியிலேயே தங்களது வாகனத்தை நிறுத்துவிட்டுச் செல்கின்றனர். இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் காணப்படுகிறது. மேற்கண்ட மகால் கட்டடம் கட்டட அனுமதிக்கு மாறாக கூடுதலாகவும், வரைபடத்திற்கு மாறுபட்டும் கட்டடம் கட்டப்பட்டும், இக்கட்டடத்திற்கு நான்கு புறமும் அரசு விதிகளின்படி இடைவெளி இடம் (Setback space) விடாமலும், சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டும் மேலும் வருவாய்த் துறை, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை போன்ற துறைகளிலிருந்து தடையில்லா சான்று பெறாமல்

கட்டப்பட்டுள்ள மேற்கண்ட ஜே ஏ எஸ் மகால் கட்டடத்தின் மீது தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(1) மற்றும் 57ன்படி தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மீது அமலாக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 7 நாள் 10.1.2023 –ன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6)எதிர்மனுதாரரான பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ச. செல்வக்குமார் என்பவர் 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சி A I B E A நகர் "எ" காலனியில் JAS மகாலுக்கு 1594 சதுர அடி பரப்பில் கூட்ட அறை (Meeting Hall) கட்டிக்கொள்ள 23.8.2021 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டட வரைபட அனுமதியைக்காட்டிலும் கூடுதலாக 4624 சதுர அடி அளவிற்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளதையடுத்து, மேற்கண்ட JAS மகால் உரிமையாளருக்கு மேற்கண்ட கட்டடத்தில் நிகழ்ச்சிகள் ஏதும் நடத்தக்கூடாது என 25.9.2023 அன்று தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்பதையும், இதனைத் தொடர்ந்து Town and Country Planning Act-படியும், வீட்டுவசதித் துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 7, நாள் 10.1.2023ன்படியும் Lock and Seal தாக்கீது, De-occupation தாக்கீது மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் .எனது 5.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் .(மற்றும்) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely –

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையயிடுகிறது.

மனுதாரர் திரு. ஆர்.மயில்சாமி என்பவர் தனது 16.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பரவை பேரூராட்சிக்குட்பட்ட AIBEA நகரில் JAS மஹால் என்கிற கட்டடமானது போதிய இடைவெளியின்றி, பேரூராட்சி கட்டட அனுமதிக்கு மாறாக விதிமீறி கட்டடப்பட்டுள்ளது எனவும் மற்றும் அவசரகால வழியின்றியும் கட்டப்பட்டுள்ளதாகவும் என புகார் தெரிவித்துள்ளார்.

பரவை பேரூராட்சியின் 23.08.2021 நாளிட்ட கட்டட அனுமதி ஆணையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் JAS MAHAL கட்டடத்திற்கு தரைதளம் மற்றும் முதல் தளம் தலா 797 சதுர அடி என மொத்தம் 1594 சதுர அடியில் கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் புகார் மனு வரப்பெற்றதும், பரவை பேரூராட்சி வரித்தண்டலரால் மேற்படி கட்டடத்தை ஆய்வு செய்ததில் பேரூராட்சியின் அனுமதிக்கு மாறாக தரைத்தளம் 2424 சதுர அடியும், முதல்தளம் 2424 சதுர அடியும் என கட்டடப்பட்டுள்ளதன் மூலம் கூடுதலாக அனுமதியின்றி தரைதளம் 1627 சதுர அடி மற்றும் முதல் தளம் 1627 சதுர அடியும் என கட்டப்பட்டுள்ளதன் மூலம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது எனவும், மேலும் பேரூராட்சியால் அனுமதி அளிக்காத 2வது மாடி கட்டடத்திற்கு 1370 சதுர அடியில் எவ்வித அனுமதியின்றி முறைகேடாக கட்டப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது என பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

பரவை பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள JAS MAHAL, நகர் ஊரமைப்புத்துறையின் வரைபட அனுமதியின்றியும், பரவை பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றியும் விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 07 நாள் 10.01.2023–ல் வெளியிடப்பட்டுள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56,57 மற்றும் 80 (A)ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீதான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 3 மாதக் காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்த இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், பரவை பேரூராட்சியால் 23.08.2021 நாளிட்ட கட்டட அனுமதி ஆணையில் புகாருக்குள்ளான JAS MAHAL கட்டடத்திற்கு முதல் தளம் மற்றும் தரைத்தளம் ஆகியவற்றிற்கு தலா 797 சதுர அடியில் கட்டட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் மேற்காணும் கட்டடப்பணி முடிவுற்றதும் பரவை பேரூராட்சியின் அலுவலர்களால் கட்டடத்தை ஆய்வு மேற்கொள்ளாமல், தற்போது புகாராக மனுதாரர் தெரிவிக்கும் சமயத்தில் அவசர அவசரமாக மேற்படி கட்டடத்தை ஆய்வு செய்து கட்டட உரிமையாளரால் மேற்படி கட்டடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதை விட விதிமீறி கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது என பரவை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர், நகரமைப்பு ஆய்வர் உட்பட பேரூராட்சியின் எவ்வித அலுவலர்களும் அவ்வப்போது கட்டடம் கட்டப்பட்டு வருவதை ஆய்வு செய்யாமல், பணியில் மெத்தனத்துடனும் உள்நோக்கத்துடனும் பொறுப்பற்ற முறையில் செயலாற்றி உள்ளனர்

என்பதை தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது. இவ்வாறு இந்நேர்வில் கடமை தவறி பணியாற்றியுள்ள பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர், நகரமைப்பு ஆய்வர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியிலான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் – 26 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், புதுவிளாங்குடி,
மதுரை–18.

2) செயல் அலுவலர்,
பரவை சிறப்புநிலை பேரூராட்சி ,
மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
02/11/2023